05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல் கற்பியல் வாழ்க்கை

கலைச்செல்வி த/பெ கோபால் தாசு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# KEHIDUPAN *KALAVIYAL* DAN *KARPIYAL* DALAM KARYA *PATINEN KILLKANAKKU*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

KALAICHELVI A/P GOPAL DAS

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல் கற்பியல் வாழ்க்கை

கலைச்செல்வி த/பெ கோபால் தாசு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH DOKTOR FALSAFAH

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRI

2021

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


UPSI/IPS-3/BO 32
Pind : 00 m/s: 1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

Sila tanda (√)
Kertas Projek
Sarjana Penyelidikan
Sarjana Penyelidikan dan Kerja Kursus
Doktor Falsafah ✓

**INSTITUT PENGAJIAN SISWAZAH**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

Perakuan ini telah dibuat pada 10 (hari bulan) Jun (bulan) 2021.

**i. Perakuan pelajar** :

Saya, Kalaichelvi a/p P Gopal Das, P20142002604, Fakulti Bahasa dan Komunikasi (SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk Kehidupan *Kalaviyal* Dan *Karpiyal* Dalam Karya *Patinen Kilkanakku* adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya

Tandatangan pelajar

05-45068 tbupsi

**ii. Perakuan Penyelia:**

Saya Prof. Madya Dr. Samikkanu Jabamoney a/l Ishak Samuel (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk Kehidupan *Kalaviyal* Dan *Karpiyal* Dalam Karya *Patinen Kilkanakku*

(TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh Ijazah Doktor Falsafah (Kesusasteraan Tamil) (SLA NYATAKAN NAMA IJAZAH).

24.3.2021

Tarikh

Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UPSI/IPS-3/BO 31
Pind.: 01 m/s.1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

**INSTITUT PENGAJIAN SISWAZAH /**
***INSTITUTE OF GRADUATE STUDIES***

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK**
***DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM***

Tajuk / *Title*: Kehidupan *Kalaviyal* Dan *Karpiyal* Dalam Karya *Patinen Kilkanakku*

No. Matrik /*Matric No.*: P20142002604

Saya / *I* : Kalaichelvi a/p P Gopal Das mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*
2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*
3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*
4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah / *Please tick ( √ ) from the categories below:-*

☐ **SULIT/*CONFIDENTIAL*** — Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972*

☐ **TERHAD/*RESTRICTED*** — Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restricted information as specified by the organization where research was done.*

☑ **TIDAK TERHAD / *OPEN ACCESS***

(Tandatangan Pelajar/ Signature)

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*) & (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Tarikh: 24.3.2021

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the related authority/organization mentioning the period of confidentiality and reasons for the said confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## நன்றி நவில்தல்

‘பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல் கற்பியல் வாழ்க்கை’ என்னும் ஆய்வுப் பணியை நிறைவாகச் செய்து முடிக்க அருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு என் முதற்கண் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். இந்த ஆய்வுப் பணி முழுமை பெற பொறுமை காத்து, ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து நல்லதோர் வழிகாட்டியாக இருந்த என் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய இணைப்பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெயமணி ஈசாக்கு சாமுவேல் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறேன். அவருடைய சீரிய வழிகாட்டுதலும் பொறுமையும் பொறுப்பும் இந்த ஆய்வு முழுமை பெற எனக்குப் பேருதவியாக அமைந்தன. இந்த ஆய்வு குறித்த தகவல்களைத் திரட்ட துணை நின்ற சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழக விரிவுரைஞர் குறிப்பாக முனைவர் மனோன்மணி தேவி அவர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தை உரிதாகுகின்றேன். இந்த ஆய்வு முழுமை பெற இவர்களின் வழிகாட்டல் பெருந்துணையாய் அமைந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொல்காப்பியம், பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய நூல்கள் மீது ஈடுபாட்டை எனக்குள் ஏற்படுத்தி இந்த ஆய்வுக்கு வித்திட்ட மலாயா பல்கலைக்கழகப் பேராசிரியர் முன்னாள் தமிழ்த்துறை தலைவர் இணைப்பேராசிரியர் முனைவர் சு. குமரன் அவர்களுக்கு நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். மேலும் ஆய்வுக் கட்டுரை குறித்தும் எழுதும் நுணுக்கத்தைக் குறித்து நுட்பமான ஆலோசனை வழங்கி ஊக்கம் கொடுத்த மலாயாப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் இராஜேந்திரன், ஆய்வு தலைப்பினை விளக்கி, ஆய்வு குறித்த தகவல்களைத் திரட்ட துணை நின்ற சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ஒப்பில்லா மதிவாணன், முனைவர் சு. சாதாசிவம் (சென்னை), திருமண குடும்பவியல் ஆலோசகர் குணபதி ஆறுமுகம் அவர்களுக்கும் ஆய்வுப் பயணத்தில் என்னோடு ஆய்வினைத் தொடங்கிய தோழி பிரேமி உள்ளிட்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி மாலையைச் சூட்டுகின்றேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நிறைவாக என்னை ஈன்றெடுத்து இந்த உலகுக்கு அடையாளம் காட்டிய என் பெற்றோர் கோபால்தாஸ் சரோஜினி அவர்களுக்கும் கரம் பற்றிய நாள் தொட்டு எனக்கு வாழ்க்கை துணையாகவும் மேற்கல்விப்பெற வழித்துணையாகவும் நின்று ஆய்வு மேற்கொள்ள உற்ற துணையாக இருந்த அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய கணவர் மோகன் அவர்களுக்கும், பாசத்திற்குரிய அன்புச் செல்வங்களான சுகித்திரா, ஹரிசங்கர், லுகாசினி ஆகியோருக்கும், என் உடன் பிறந்தவர்களுக்கும், தட்டச்சு செய்ய உதவிய என் மாணவி அனுஷா குமாரிக்கும் அன்பு கலந்த நன்றியைப் பதிவு செய்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**ஆய்வுச் சாரம்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல், கற்பியல் வாழ்வியல் நெறிகளை அடையாளம் கண்டு பகுத்தாராய்வதும் மேலும், தற்கால களவியல், கற்பியல் வாழ்வியலுக்குப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வழங்கும் வாழ்வியல் விழுமியங்களை விளக்குவதும் இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்விற்கு தரவுகளைச் சேகரிப்பதற்குப் பண்புசார் பகுப்பாய்வு அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆய்வினை அணுகுவதற்கு விளக்கமுறை அணுகுமுறைகளான பனுவல் பகுப்பாய்வு, நூலக ஆய்வு, நூலாய்வு ஆகியவைப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் வழி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தொல்காப்பியம் காட்டும் 161 களவியல் செய்யுள்களும் 94 கற்பியல் செய்யுள்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், தற்கால வாழ்வியலுக்குத் தேவையான 10 வாழ்வியல் விழுமியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ளன என இந்த ஆய்வில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், தொல்காப்பிய களவியல், கற்பியல் வாழ்க்கை கருத்துகள் சங்க மருவிய காலத்தில் பேணப்பட்டு வந்தாலும் தற்காலத்தில் இவை அதிகளவு பேணப்படாமல் ஒதுக்கி வைத்து விட்டதால் களவு வாழ்க்கையும் கற்பு வாழ்க்கையும் பல சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளன என்பதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. ஆகவே, இந்த ஆய்வானது இன்றைய களவு, கற்பு வாழ்க்கையை மேம்படுத்துவதற்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**KEHIDUPAN *KALAVIYAL* DAN *KARPIYAL* DALAM KARYA *PATINEN KILKANAKKU***

## ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti dan menganalisis unsur-unsur *kalaviyal* dan *karpiyal* iaitu kehidupan sebelum dan selepas perkahwinan berdasarkan teori *Tolkappiyam* serta menghuraikan nilai murni kehidupan *kalaviyal* dan *karpiyal* bagi masyarakat kontemporari yang terkandung dalam teks *Patinen kilkanakku*. Kajian ini menggunakan pendekatan kualitatif yang menerapkan kaedah deskriptif yang merangkumi kaedah keperpustakaan dan analisis teks. Analisis dan perbincangan kajian dibuat berpandukan unsur *kalaviyal* dan *karpiyal* yang diutarakan oleh teori *Tolkappiyam.* Dapatan kajian mendapati bahawa karya *Patinen kilkanakku* mengandungi sebanyak 161 puisi yang berkaitan dengan unsur *kalaviyal* dan 94 puisi yang berkenaan dengan *karpiyal*. Selain itu, kajian ini mengenal pasti 10 nilai murni yang terkandung dalam teks Patinen kilkanakku yang dapat dijadikan panduan dalam menjalani kehidupan pada zaman komtemporari ini. Kesimpulannya, teks *Patinen kilkanakku* menyampaikan nilai murni yang patut diikuti dalam kehidupan sebelum dan selepas perkahwinan dalam masyarakat kontemporari. Implikasinya, kajian ini akan menjadi panduan kepada masyarakat kontemporari dalam kehidupan sebelum dan selepas perkahwinan dalam membentuk keluarga yang harmoni.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



**KALAVIYAL AND KARPIYAL LIVES IN PATINEN KILLKANAKKU**

**ABSTRACT**

This study aims to identify and analyze the elements of *kalaviyal* and *karpiyal* in life before and after marriage based on *Tolkappiyam* theory as well as describe the pure value of *kalaviyal* and *karpiyal* life for contemporary society contained in the text *Patinen kilkanakku.* This study uses a qualitative approach that applies descriptive methods which include library methods and text analysis. Analysis and discussion of this study are based on *kalaviyal* and *karpiyal* elements of *Tolkappiyam* theory. The study found that *Patinen killkanakku*'s text contain 161 poems related to *kalaviyal* elements and 94 poems related to *karpiyal* elements. In addition, this study identifies 10 noble values contained in the text *Patinen kilkanakku* that can be used as a guide in living life in contemporary times. In conclusion, abandonment of these elements bring difficulties in pre-marital love (*kalaviyal)* and post-marital love (*karpiyal)* relationships in contemporary society. The implication is that this study will be a guide to today's society in their *kalaviyal* and *karpiyal* relationships to lead a harmonious life.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**உள்ளடக்கம்**


| | **Muka Surat** |
|---|---|
| **PENGAKUAN KEASLIAN PENULISAN** | ii |
| **PENGESAHAN PENYERAHAN TESIS** | iii |
| **நன்றி நவில்தல்** | iv |
| **ஆய்வுச்சாரம்** | vi |
| **ABSTRAK** | vii |
| **ABSTRACT** | viii |
| **உள்ளடக்கம்** | xi |
| **அட்டவணை** | xvi |
| **வரைப்படப் பட்டியல்** | xvii |
| **சுருக்கக் குறியீட்டுப் பட்டியல்** | xviii |
| **பின்னிணைப்பு** | xx |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 ஆய்வுப் பின்னணி | 3 |
| 1.2 ஆய்வுச் சிக்கல் | 6 |
| 1.3 ஆய்வு நோக்கம் | 9 |
| 1.4 ஆய்வு வினா | 9 |
| 1.5 ஆய்வின் முக்கியத்துவம் | 10 |
| 1.6 ஆய்வு எல்லை | 11 |
| 1.7 ஆய்வு சான்றாதாரங்கள் | 12 |
| 1.7.1 முதன்மை சான்றாதாரங்கள் | 13 |
| 1.7.2 துணைமைச் சான்றாதாரங்கள் | 13 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.8 கலைச்சொல் விளக்கம் 14

1.8.1 பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் 14

1.8.2 களவியல் 18

1.8.3 கற்பியல் 19

1.9 முடிவுரை 19

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 21

2.2 முந்தைய ஆய்வுகள் 22

2.2.1 உள்நாட்டு ஆய்வுகள் 23

2.2.2 வெளிநாட்டு ஆய்வு 29

2.2.3 ஆய்வுக் கட்டுரைகள் 42

2.3 முடிவுரை 46

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 48

3.2 ஆய்வு வடிவமைப்பு 49

3.2.1 ஆய்வுக் கட்டமைப்பு 50

3.3 ஆய்வு அணுகுமுறை 51

3.3.1 பனுவல் பகுப்பாய்வு முறை 52

3.3.2 நூல் ஆய்வு 53

3.3.3 நூலக ஆய்வு முறை 53

3.4. தரவுகள் சேகரிப்பு முறை 55

3.4.1 தரவுகள் வாசிப்பு முறை 55

3.4.2 தரவுகள் தேர்ந்தெடுக்கும் முறை 56

3.4.3 தரவுகள் வகைப்படுத்தும் முறை 57

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



3.5 ஆய்வுக் கோட்பாடு 57

3.6 களவியல் கோட்பாடு 58

3.6.1 இயற்கைப்புணர்ச்சி 59

3.6.1.1 காட்சி 60

3.6.1.2 ஐயம் 61

3.6.1.3 ஐயம் தெளிதல் 61

3.6.1.4 குறிப்பறிதல் 62

3.6.2 இடந்தலைப்பாடு 63

3.6.3 பாங்கற் கூட்டம் 64

3.6.4 பாங்கியர் கூட்டம் 64

3.6.4.1 குறியிடம் 65

3.6.4.1.1 பகற்குறி 66

3.6.4.1.2 இரவுக்குறி 67

3.6.4.1.3 குறிமறுத்தல் 67

3.6.4.1.4 அல்ல குறிப்படுதல் 68

3.6.5 வரைவு கடாதல் (திருமணம்) 69

3.6.6 அறத்தோடு நிற்றல் 70

3.6.7 உடன் போக்கு 71

3.6.8 கூற்று 72

3.6.8.1 தலைவன் கூற்று 72

3.6.8.2 தலைவி கூற்று 73

3.6.8.3 செவிலி கூற்று 73

3.6.8.4 நற்றாய் கூற்று 74

3.6.8.5 கண்டோர் கூற்று 75


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



3.7 கற்பியல் கோட்பாடு 76

3.7.1 மணம் 76

3.7.2 கூற்று 78

3.7.2.1 தலைவன் கூற்று 78

3.7.2.2 தலைவி கூற்று 79

3.7.2.3 காமக்கிழத்தியர் கூற்று 79

3.7.2.4 செவிலி கூற்று 80

3.7.2.5 வாயில் கூற்று 80

3.7.3 ஊடல் 80

3.7.4 அலர் 81

3.7.5 பிரிவு 81

3.7.6 தவம் 83

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.8 கோட்பாட்டுக் கட்டமைப்பு 84

3.9 முடிவுரை 85

**இயல் 4 தரவு பகுப்பாய்வு**

4.1 முன்னுரை 86

4.2 பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடம் பெற்றுள்ள களவியல் வாழ்வியல் நெறிகளை அடையாளம் காணுதல் 88

4.3 பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் இடம் பெற்றுள்ள களவியல் வாழ்வியல் நெறிகளைத் தொல்காப்பிய கோட்பாட்டு வழி பகுத்தாராய்தல் 89

4.3.1 இயற்கைப்புணர்ச்சி 93

4.3.1.1. காட்சி 95

4.3.1.2 ஐயம் 101

4.3.1.3 .ஐயம் தெளிதல் 106

4.3.1.4 குறிப்பறிதல் 111

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.3.2 இடந்தலைப்பாடு 119

4.3.3 பாங்கன் கூட்டம் 125

4.3.3.1 தலைவன் கூற்றுவழிப் பாங்கன் கூட்டம் 131

4.3.4 பாங்கியர் கூட்டம் 137

4.3.4.1 தோழி கூற்று நிகழ்த்தும் இடங்கள் 138

4.3.4.2 தலைவன் கூற்றுவழிப் பாங்கியற் கூட்டம் 149

4.3.4.3 தலைவி கூறுவழிப் பாங்கியற் கூட்டம் 158

4.3.5 குறியிடம் 170

4.3.5.1 பகற்குறி 174

4.3.5.2 இரவுக்குறி 178

4.3.5.3 குறி மறுத்தல் 182

4.3.5.4 அல்ல குறிப்படுதல் 185

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.3.6 வரைவு கடாதல் (திருமணம்) 191

4.3.6.1 அலர் அம்பல் 206

4.3.6.2 பிரிவு நிகழும் காலம் 210

4.3.7 அறத்தோடு நிற்றல் 231

4.3.7.1 தோழி செவிலியிடம் அறத்தோடு நிற்றல் 234

4.3.7.2 தலைவி அறத்தோடு நிற்றல் 238

4.3.7.3 நற்றாய் அறத்தொடு நிற்றல் 240

4.3.8 உடன் போக்கு 243

4.3.9 கூற்று 248

4.3.9.1 களவில் தலைவன் கூற்று 248

4.3.9.2 தலைவி கூற்று 254

4.3.9.3 செவிலி கூற்று 272

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.3.9.4 நற்றாய் கூற்று 279

4.3.9.5 கண்டோர் கூற்று 288

4.4 பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் இடம் பெற்றுள்ள கற்பியல் வாழ்வியல் நெறிகளைத் தொல்காப்பிய கோட்பாட்டு வழி பகுத்தாராய்தல் 292

4.4.1 மணம் 294

4.4.1.1 திருமண ஏற்பாடு 298

4.4.1.2 திருமண நிகழ்ச்சி 299

4.4.1.3 மணவினைக் காலம் 300

4.4.1.4 திருமணம் நிகழும் இடம் 300

4.4.1.5 கட்டுப்பாட்டு வாழ்க்கை 301

4.4.2 கூற்று 308

4.4.2.1 தலைவன் கூற்று 308

4.4.2.2 தலைவி கூற்று 324

4.4.2.3 காமக்கிழத்தியர் கூற்று 352

4.4.2.4 செவிலிக் கூற்று 355

4.4.2.5 வாயில் கூற்று 358

4.4.3 ஊடல் 361

4.4.4 அலர் 370

4.4.5 பிரிவு 375

4.4.5.1 பொருள்வயின் பிரிவு 377

4.4.5.2 பரத்தையிற் பிரிவு 384

4.4.6. தவம் 401

4.5 தற்கால களவியல் கற்பியல் வாழ்வியலுக்குப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வழங்கும் வாழ்வியல் விழுமியங்கள் 406

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.5.1 விழுமியம் - இன்றைய பொருள் தகுதி 407

4.5.1.1 ஒழுக்கம் ஓம்பல் 408

4.5.1.2 பிறன் மனை நோக்காமை 416

4.5.1.3 கணவனின் இல்லறக் கடமை 423

4.5.1.4 நட்பு 427

4.5.1.5 விருந்தோம்பல் 437

4.5.1.6 சுற்றம் பேணல் 444

4.5.1.7 அன்புடைமை 451

4.5.1.8 பழக்க வழக்கங்கள் 456

4.5.1.9 இனியவைக்கூறல் 467

4.5.1.10 பொய்யாமை 474

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.6 முடிவுரை 480

**இயல் 5 ஆய்வுக் கண்டடைவுகளும் பரிந்துரைகளும்**

5.1 முன்னுரை 481

5.2 ஆய்வு முடிவுகளின் பகுப்பாய்வு 482

5.2.1 பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல், கற்பியல் வாழ்வியல் நெறிகளை அடையாளம் காணுதல் 483

5.2.2 தொல்காப்பியம் காட்டும் களவியல் கற்பியல் கோட்பாட்டு வழி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பகுத்தாராய்தல் 493

5.2.3 தற்கால களவியல் கற்பியல் வாழ்வியலுக்கும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வழங்கும் வாழ்வியல் விழுமியங்கள் 506

5.3 தொடர் ஆய்வுக்கான பரிந்துரைகள் 512

5.4 முடிவுரை 513

**மேற்கோள்நூல்கள்** 519

**பின்னிணைப்பு** 530

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணை


| அட்டவணை எண் | | பக்கம் |
|---|---|---|
| 4.1 | பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அடையாளங்காணப்பட்ட களவியல் கற்பியல் செய்யுள்களின் எண்ணிக்கை | 88 |
| 4.2 | சிலாங்கூர் மாநிலத்தில் 2011 – 2015 ஆண்டு வரை நிகழ்ந்த மணமுறிவு சம்பவங்களின் புள்ளிவிபரம் | 425 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## வரைப்படப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு வடிவமைப்பு | 50 |
| 3.2 | ஆய்வுக் கட்டமைப்பு | 84 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## சுருக்கக் குறியீட்டுப் பட்டியல்

| | |
|---|---|
| தொல் | தொல்காப்பியம் |
| தொல். பொருள் | தொல்காப்பியப் பொருளதிகாரம் |
| தொல் . களவு | தொல்காப்பியக் களவியல் |
| தொல் . கற்பு | தொல்காப்பியக் கற்பியல் |
| செய் | செய்யுள் |
| பா | பாடல் |
| ப | பக்கம் |
| பக் | பக்கங்கள் |
| நூ | நூற்பா |
| நாலடி | நாலடியார் |
| குறள் | திருக்குறள் |
| ஐந்.ஐம் | ஐந்திணை ஐம்பது |
| ஐந். எழு | ஐந்திணை எழுபது |
| தி. ஐம் | திணைமொழி ஐம்பது |
| தி.மா.நூற் | திணைமாலை நூற்றைம்பது |
| இன்னா.நாற் | இன்னா நாற்பது |
| இனி.நாற் | இனியவை நாற்பது |
| ஆசாரக் | ஆசாரக் கோவை |
| சிறுபஞ் | சிறுபஞ்சமூலம் |
| ஏலா | ஏலாதி |
| நான் | நான்மணிக்கடிகை |
| திரி | திரிகடுகம் |
| பழ | பழமொழி நானூறு |
| முது.மொழி | முதுமொழிக்காஞ்சி |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | |
|---|---|
| கைந் | கைந்நிலை |
| கார். நாற் | கார் நாற்பது |
| மெய்ப் | மெய்ப்பாட்டியல் |
| குறுந் | குறுந்தொகை |
| சீவக | சீவகசிந்தாமணி |
| திரு.கோ | திருக்கோவையார் |
| அ.வி | அகப்பொருள் விளக்கமும் |
| நம்பி.அகப் | நம்பியகப் பொருள் |
| குறிஞ்.தி | குறிஞ்சித்திணை |
| சிலப்-கானல் | சிலப்பதிகாரம் |
| நற் | நற்றிணை |
| அகம் | அகநானுறு |
| ஐங் | ஐங்குறுநூறு |
| கலி | கலித்தொகை |
| சில.கொலைக் | சிலப்பதிகாரத்தில் |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## பிண்ணினைப்பு

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படும் களவியல் செய்யுள்களின் எண்ணிக்கை

2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படும் கற்பியல் செய்யுள்களின் எண்ணிக்கை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainu

# இயல் 1

## அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழும் தமிழிலக்கியமும் மிகவும் தொன்மை வாய்ந்தவை. தமிழ் என்று பிறந்தது என்று அறிஞர்களால் அறுதியிட்டு உரைக்கவியலாத தொன்மை நலம் வாய்ந்தது; பரந்துபட்ட கால எல்லையில் வளர்ந்து சிறந்து, விரிந்துபட்ட இலக்கியச் செல்வத்தை உடையது (செந்துறைமுத்து, 1994). அத்தகைய பழமையும் வளமையும் கொண்ட தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் உலகச் சிறப்புடையனவாகும். இவ்விலக்கியங்கள் தமிழ் மக்களின் அன்றாட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வாழ்க்கை நெறிகளையும் நாட்டின் வளத்தையுமே அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்தவை (அடைக்கலசாமி, எம்.ஆர். 1997). சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை தமிழ் இலக்கியம் வளத்துடன் வளர்ந்து வருகிறது. கடைச்சங்க காலத்தில் எழுந்த நூல்களைப் ‘பாட்டும் தொகையும்’ என்று பிரித்து, அவற்றிற்குப் ‘பத்துப் பாட்டு’ ‘எட்டுத் தொகை’ என பெயரிட்டனர் பண்டைய தமிழ் அறிஞர்கள். இதுவே, பதினெண் மேற்கணக்கு நூல்களாகும் (தமிழண்ணல், 2014). சங்க காலத்தை அடுத்து சங்கம் மருவிய காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் தோன்றின. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அற நூல்களாகும். (செந்துறைமுத்து, 1994). **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல் கற்பியல் வாழ்க்கை** என்ற தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வியலில், ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரங்கள், கலைச்சொல் விளக்கம், முடிவுரை ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.1 ஆய்வுப் பின்னணி

தமிழ் இலக்கியங்களில் தலை சிறந்தது சங்க இலக்கியம் ஆகும். இச்சங்க இலக்கியங்கள் சங்க காலத்தில் தோன்றியவையாகும். இச்சங்க காலம் முறையே முதல், இடை, கடை சங்கங்கள் என மூவகை சங்கங்களாக வளர்ச்சியடைந்தன. தென் மதுரையில் முதல் சங்கம் அமைந்தது. முதல் சங்க நூல் அகத்தியம். மதுரையும் அகத்திய நூலும் கடற்கோள் எனும் ஆலி பேரலையால் அழிந்தது. அடுத்து கபடாபுரத்தில் இடைச் சங்கம் அமைந்து கடற்கோளால் அழிந்தது. இடைச் சங்கத்தில் தோன்றிய இலக்கண நூல்கள் அகத்தியமும் தொல்காப்பியமும் ஆகும். இறுதியாக கடைச்சங்கம் இன்றுள்ள மதுரையில் எழுந்தது. இச்சங்கத்தின் இலக்கண நூல்களாக அகத்தியமும் தொல்காப்பியமும் விளங்கின (பாலசுப்பிரமணியன், சி. 2013).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கடைச் சங்கத்தின் இறுதிப் பகுதியில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முடிய வரையுள்ள காலத்தில் முடியுடைய மூவேந்தராலும், சிற்றரசர்களாலும் ஆளப்பட்டுவந்த தமிழ்நாடு அயலார் ஆட்சிக்குட்பட்டது. அயலார்களுக்கும் உள்நாட்டு அரசர்களுக்கும் போர் நடைபெற்றது. இதன் விளைவாக, சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் களப்பிரர்களும், நடு நாட்டையும் தொண்டை நாட்டையும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பல்லவர்களும் கைப்பற்றி ஆண்டார்கள். களப்பிரர்கள் பாலி மொழியியையும் பௌத்த சமயத்தையும் ஆதரித்தனர். பல்லவர்கள் பிராகிருத மொழியினையும் சமண சமயத்தையும் ஆதரித்தனர். பாலி மொழியும் பிராகிருத மொழியும் ஆட்சி மொழியாக இருந்தன. இக்காலத்தில் தமிழ்மொழி ஆதரிக்கப்படாமல் தாழ்த்தப்பட்டு வளர்ச்சி குன்றி போற்றுவாரற்று விளங்கியது. இதன் விளைவாக, தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்க்கலை, தமிழ் பண்பாடு, தமிழ் நாகரிகம் ஆகியவை வீழ்ச்சியுற்றது. இக்காலகட்டத்தில் தமிழ்மொழி நூல்கள் சிறப்பான முறையிலும் பெருமளவிலும் தோன்றுவதற்கு தோன்றவில்லை. நாடு முழுவதும் நிலையற்ற சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் சங்கக் காலச் செல்வச் செழிப்பு மிக்க வாழ்வு துவண்டது. கலை இலக்கிய நோக்கத்தினாலும், அரசியல் நோக்கத்தினாலும் தமிழக வரலாற்றில் இக்காலப்பகுதியினை இருண்ட காலம் என்று குறிப்பிட்டனர் (பாலசுப்பிரமணியன், சி. 2008).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருண்ட காலத்தில் கி.பி 470இல் வச்சிரநந்தி என்ற சமண முனிவர் மதுரையில் திராவிடச் சங்கம் ஒன்றை நிறுவினார். சமணக் கொள்கைகளைப் பரப்புவதே இச்சங்கத்தின் நோக்கமாகும். இச்சங்கம் சமணக் கொள்கைகளை விளக்கும் நூல்களை வெளியிட்டன. இச்சங்கத்தார் தமிழ் மக்கள் தம் பண்டை அறவொழுக்கங்களைப் போற்றி அவற்றின் வழியே நல் வாழ்க்கை நடத்த சிறு, சிறு நீதி நூல்களை வெளியிட்டனர். அவ்வாறு தோன்றிய நீதி நூல்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொகுப்பே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும் (அடைக்கலசாமி, ஆர். 1997). மேலும், இக்காலத்தில்தான் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரட்டைக் காப்பியங்கள் தோன்றின (அடைக்கலசாமி, ஆர். 1997).

ஆய்வாளர் இக்காலக்கட்டதில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை முனைவர் பட்ட ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்துள்ளார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மொத்தம் பதினெட்டு. அவற்றுள் ஆறு அக நூல்கள், பதினொன்று நீதி நூல்கள், ஒன்று புற நூல் ஆகும். அவை, *நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள்,*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

*திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏழாதி, முதுமொழிக்காஞ்சி, ஐந்தினை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார்நாற்பது, களவழி நாற்பது மற்றும் கைந்நிலை* ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும் (இராசாராம். துரை, 1995). பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மாந்த வாழ்க்கைச் சிறப்பாக அமைவதற்கான களவியல் கற்பியல் கருத்துகளையும் சிந்தனைகளையும் கொண்டுள்ளன. இவை அனைத்தும் மக்களுக்கு ஒழுக்கத்தை அறிவுறுத்தத் தோன்றிய நீதி நூல்கள் ஆகும். இந்நூல்களில் இடம் பெற்றுள்ள களவியல் கற்பியல் கருத்துகளைத்தான் ஆய்வாளர் தன்னுடைய ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொண்டுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுச் சிக்கல்

செல்வச் செழிப்பு மிக்க சங்க கால வாழ்க்கை, அயலர் வருகைக்குப் பின், சட்டம், ஒழுங்கு, பண்பாடு மற்றும் அரசியல் ஆகியவற்றில் நிலைக்குழைந்தது (இராமசாமி, அ. 2010). இவ்வாறு குமுகாயம் ஒளியிழந்து போனதால் இக்காலத்தை அறிஞர்கள் இருண்ட காலம் என குறிப்பிடுகின்றனர் (பாலசுப்பிரமணியன், சி. 2008).

தமிழ் நாட்டிற்குச் தஞ்சம் புகுந்த ஆரியர்கள் தமிழ் பண்பாடு சீர்குலையச் செய்தனர். சாதி, மதம், சமயம், வாழ்க்கைமுறை ஆகியவற்றில் குழப்பங்கள் ஏற்பட்டன. சங்க மருவிய கால குமுகாயத்தில் ஏற்பட்ட இச்சிக்கல்களைக் களைய சமண பௌத்த புலவர்கள் முன்வந்தனர். இவர்கள் சங்க மருவிய கால மக்களுக்கு ஒழுக்கத்தை வலியுறுத்தும் அற நூல்களை இயற்றினர். அத்தோடு, இறைவனை நினைவூட்டும் சமய நூல்களையும் இயற்றினர். அதனால், இக்காலத்தை அறநெறிக்காலம் என்றும் சிறப்பித்துக் கூறினர் என செந்துறைமுத்து (1994) சுட்டிக் காட்டுகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சங்க மருவிய கால நூல்களான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அறக் கருத்துகள் தற்கால வாழ்விற்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கும் ஓர் அரிய களஞ்சியமாகும். இந்நூல்களில் களவியல் கற்பியல் கருத்துகள் பரந்து காணப்படுகின்றன. தனி மாந்தன் கற்பியல் வாழ்க்கையை அடைவதற்கு முன் களவியல் வாழ்க்கையைக் கடந்து வருகின்றான். மாந்த வாழ்க்கை களவியல் கற்பியல் வாழ்க்கைக்கு உட்பட்டதாக அமைகின்றது.

தற்பொழுது மனித வாழ்வின் உன்னதமான களவியல் கற்பியல் வாழ்க்கையில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. சாதி, மதம், களவு கற்பு வாழ்க்கையில் புரிந்துணர்வு இல்லாமை, பொருளாதாரம், ஒழுக்கமற்ற வாழ்க்கை, மூன்றாம் நபரின் தலையீடு, அதீத எதிர்பார்ப்புகள், நம்பிக்கையின்மை கணவனின் பொறுப்பற்ற தன்மை, கணவனின் அடிமைத்தனம், ஆண் ஆதிக்கம் என்று இன்னும் பல விதங்களில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இது போன்ற சிக்கல்களால் களவியல் வாழ்க்கையும் கற்பியல் வாழ்க்கையும் பாதிப்படைகின்றன. இப்பாதிப்புகளினால் மணமுறிவு, மணவிலக்கு, மன அழுத்தம், தற்கொலை முயற்சி, பிடிமானம் இல்லாத வாழ்க்கை மற்றும் தனித்து வாழும் தாய், தந்தை போன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. தற்பொழுது இச்சிக்கல்கள் பெருகி வருவதைத் தகவல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஊடகங்கள் மற்றும் சமூக நலத்துறை மூலமாகக் காணலாம். இதற்கு தேசிய பதிவுத்துறையின், திருமண தீர்ப்பாய விண்ணப்பங்களின் புள்ளிவிபரங்கள் சான்றாக அமைகின்றது. Statistik Permohonan Tribunal Perkahwinan 2013-31 Mei 2019, Jabatan Pendaftaran Negara 2013-2019 மே மாதம் 2019 வரை மணமுறிவிற்கு முக்கிய காரணங்களாக மூன்று சம்பவங்கள் காட்டப்படுகின்றன. அவை, பொருளாதார சிக்கலினால் 17,359 சம்பவங்கள், இல்லறத்தில் மூன்றாம் நபர்களின் தலையீட்டினால் 6,594 சம்பவங்கள் மற்றும் உடல், மன துஷ்பிரயோகத்திலால் 4884 சம்பவங்கள் ஆகும்.

05-4506 tbupsi

ஆகவே, இச்சிக்கல்களைக் களைவதற்குச் சங்க மருவிய கால நூல்களான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கூறப்படும் களவியல் கற்பியல் அறக்கருத்துகளை ஆராய்ந்து அறிந்து அதனை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வு நோக்கம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல் கற்பியல் வாழ்க்கை என்ற தலைப்பிலான இவ்வாய்வு கீழ்க்காணும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

i. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல், கற்பியல் வாழ்வியல் நெறிகளை அடையாளம் காணுதல்.

ii. தொல்காப்பியம் காட்டும் களவியல் கற்பியல் கோட்பாட்டுவழி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பகுத்தாராய்தல்.

iii தற்கால களவியல் கற்பியல் வாழ்வியலுக்குப் பதினெண் கீழ்க்கணக்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நூல்கள் வழங்கும் வாழ்வியல் விழுமியங்களை விளக்குதல்.

## 1.4 ஆய்வு வினா

i. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இடம் பெற்றுள்ள களவியல் கற்பியல் வாழ்வியல் நெறிகள் யாவை?

ii தொல்காப்பியம் காட்டும் களவியல் கற்பியல் கோட்பாட்டு வழி பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இருக்கின்றனவா?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


iii தற்கால களவியல் கற்பியல் வாழ்வியலுக்குப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வழங்கும் வாழ்வியல் விழுமியங்கள் யாவை?

## 1.5 ஆய்வின் முக்கியத்துவம்

இன்றைய நாகரீகச் சமூகச் சூழலில் களவியல் வாழ்க்கையும் கற்பியல் வாழ்க்கையும் பல சிதைவுகளை அடைந்துள்ளன. களவியலில் ஆரம்பமாகி கற்பியலில் முடிவடையும் மாந்த வாழ்வில் அறநெறிகளைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்துவது குறைந்துவிட்டது. அதனால், களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் நம்பிக்கையின்மை, உண்மையின்மை அன்பின்மை போன்ற குறைகள் நிலவுகின்றன. இதுவே, களவில் பிரிவு, கற்பில் மணமுறிவு, மணவிலக்கு, மன அழுத்தம் என்று பல பிரச்சனைகள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டிருக்கும் சமுதாயச் சிதைவுகளைக் களைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல் கற்பியல் வாழ்க்கை என்ற ஆய்வு உதவும். சங்க மருவிய காலத்தில் ஏற்பட்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழர் நாகரீகம் பண்பாடு போன்ற கூறுகளை இழக்கும் சிக்கல்களிலிருந்து மக்களை நல்வழிப்படுத்தவே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின (அடைக்கலசாமி, எம். ஆர், 1996). சங்க மருவிய காலத்தில் நிகழ்ந்த களவியல் கற்பியல் பண்பாட்டுச் சிக்கல்கள் இன்றைய சமுதாயத்தில் நிகழ்வதனைச் சமூக ஊடகங்கள் வழி அறிய முடிகின்றது. ஆகவே, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அறக்கருத்துகள் இன்று நிலவிவரும் களவியல் கற்பியல் சிக்கல்களைக் களைய முடியும். மேலும், இந்த ஆய்வு பிற ஆய்வாளர்களுக்குச் சங்க மருவிய கால கருத்துகளைத் தெரிந்து கொள்ளும் களமாக அமையும். இதுவே, பிற ஆய்வாளர்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் வேறு ஆய்வுப் பொருளைத் தேர்ந்தெடுக்கத் தூண்டலாக அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு எல்லை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மொத்தம் பதினெட்டு. இந்தப் பதினெட்டு நூல்களும் இவ்வாய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை, பதினோரு அற நூல்கள் ஆறு அக நூல்கள் மற்றும் ஒரு புற நூல் ஆகும். அற நூல்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வரிசையில் *நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏழாதி, முதுமொழிக்காஞ்சி* ஆகியவைக் குறிப்பிடத்தக்கவை ஆகும். அகநூல்கள் *வரிசையில் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார்நாற்பது, களவழி நாற்பது மற்றும் கைந்நிலை* ஆகிய நூல்கள் மட்டும் ஆய்வு எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளன (இராசாராம். துரை, 1995). மேலும், தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள களவியல் கற்பியல் கோட்பாடுகளும் ஆய்விற்குப் பயன்படுத்தப்படுகின்றன (சிவலிங்கனார். ஆ, 2015).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.7 ஆய்வுச் சான்றாதாரங்கள்

பொதுவாக ஓர் ஆய்வு மேற்கொள்வதற்கு முதன்மைச் சான்றாதாரம், துணைச் சான்றாதாரம் என இரு வகை சான்றாதாரங்களையும் பயன்படுத்துவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.7.1 முதன்மை சான்றாதாரங்கள்

இவ்வாய்விற்கு முதன்மை *சான்றாதாரமாக நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏழாதி, முதுமொழிக்காஞ்சி, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது*, கார் நாற்பது, களவழி நாற்பது மற்றும் கைந்நிலை நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன (இராசாராம், துரை. 2016). மேலும், தமிழர்களின் களவியல் கற்பியல் வாழ்வினை விளக்கும் மூலநூலாகிய *தொல்காப்பியமும்* முதன்மைச் சான்றாதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குச் சிவலிங்கனார் விளக்கவுரை பயன்படுத்தப்பட்டுள்ளது (சிவலிங்கனார். ஆ, 2015).

### 1.7.2 துணைமைச் சான்றாதாரங்கள்

களவியல் கற்பியல் பற்றிய நூல்கள், பல்வேறு கட்டுரைத் தொகுப்புகள், சஞ்சிகைகள், மாநாட்டுக் கட்டுரைகள், இணைய கட்டுரைகள், நாளிதழ்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தரவுகள் போன்றவை துணைச் சான்றாதாரங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## 1.8 கலைச்சொல் விளக்கம்

ஆய்வாளர், தம் ஆய்வில் சில சொல்லாட்சிகளைக் கையாண்டுள்ளார். அச்சொல்லாட்சிகளுக்கு விளக்கமும் தந்துள்ளார். இந்த விளக்கமானது, இந்த ஆய்வைத் துல்லியமாகவும் தெளிவாகவும் விளங்கி கொள்ள பெருந்துணையாக இருக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.1 பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

தமிழகத்தில் சங்கம் மருவிய காலமான கி.பி. 300ஆம் ஆண்டிலிருந்து 600ஆம் ஆண்டு வரை தோன்றிய நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மொத்தம் பதினெட்டு.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அவற்றில், பதினோரு நூல்கள் அற நூல்களாகவும் ஆறு நூல்கள் அக நூல்களாகவும் ஒன்று புற நூலாகவும் அமைந்துள்ளன (பாலசுப்பிரமணியன், சி. 2008).

கீழ்க்கணக்கு என்பது சிறு எண்ணிக்கையைக் குறிக்கின்றது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், குறைந்த அடிகளைக் கொண்ட செய்யுள்களைக் கொண்டவை. இவை, இரண்டடி முதல் ஆறடியில் ஐம்பது முதல் ஐநூறு செய்யுள் அடிகளைக் கொண்டவை. இந்நூலிலுள்ள அனைத்துச் செய்யுட்களும் வெண்பா யாப்பில் அமைந்தவை. இவை, பஃறொடை வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, குறள் வெண்பா மற்றும் சவலை வெண்பாக்களில் பயின்று வருகின்றவை (இராசாராம், துறை. 1996). மேலும், இந்நூல்கள் சங்க காலத்து நூல்களிலிருந்து சொல்லாச்சி, பொருள் வளம், இலக்கண மரபு போன்றவற்றையிலிருந்து வளர்ச்சிப் பெற்று வட மொழி ஆட்சி பெற்றும் இருந்தன. அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்களிலும் யாதேனும் ஒன்றினை எடுத்துக் கூறுவது கீழ்க்கணக்கு என 'பன்னிருபாட்டியல்' எனும் இலக்கண நூல் விளக்கம் கூறுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி யவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்

(ப.பாட்டியல், மேற்கோள்: 133)

மேலும், பின்வரும் தனிப்பாடல் திரட்டில் பிரபந்த தீப நூல், பதினெண் கீழ்க்கணக்கு நூலின் வரிசைக்கு விளக்கம் தருகிறது (அடைக்கலசாமி, எம்.ஆர். 1989).

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி – மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பதூஉம்
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு.

(பிரபந்த தீபம்)

இந்த வெண்பா எந்த வரிசையில் அவற்றைச் சொல்கிறதோ அதே வரிசையில் கூறுவது தான் மரபாகும். அவ்வரிசை முறையில் *நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அல்லது *இன்னிலை* ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மொத்தம் 3250 வெண்பாக்கள் அடங்கியுள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறம் சார்ந்த நூல்களாக *திருக்குறள், நாலடியார்* ஆகும். இவ்விரண்டில் பெரிய நூலாகவும் முதலில் தோன்றிய நூலாகவும் கருதப்படுவது *திருக்குறள்* ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மிகச் சிறிய நூலாக கருதப்படுவது *இன்னா நாற்பது* ஆகும். ஆறு அகநூல்களில் பெரிய நூல் திணைமாலை நூற்றைம்பது மற்றும் சிறிய நூல் *கார் நாற்பது* ஆகும். இரட்டை அறநூல்களாகக் கருதப்படுபவை *இன்னா நாற்பதும் இனியவை நாற்பது* ஆகும். மேலும், மருந்து பெயரில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அமைந்த நூல்களாக *திரிகடுகம், சிறுபஞ்சமூலம்* மற்றும் *ஏலாதி* கருதப்படுகின்றன. இறுதியாக, *ஆசாரக் கோவை* ஒழுக்கம் பற்றிக் கூறும் நூலாகவும் இறுதியாகத் தோன்றிய நூலாகவும் அமைந்துள்ளது (அடைக்கலசாமி, 1934. இராசாராம். துறை, 1996).

சங்க மருவிய காலத்தில், தமிழ்மொழி, தமிழ்க் கலைகள், தமிழ்ப் பண்பாடு ஆகியவை வளர்ச்சி குன்றி இருந்தன. அவற்றை மீட்டெடுக்கும் முயற்சியில் வச்சிரநந்தி என்ற சமண முனிவர் மதுரையில் திராவிடச் சங்கத்தை நிறுவினார். இச்சங்கத்தில் பல நூல்கள் தோற்றம் கண்டன. அவற்றில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டன. அவை யாவும் வச்சிரநந்தி என்ற சமண முனிவரால் தொகுக்கப்பட்டன (பூவண்ணன், 2000).

### 1.8.2 களவியல்

அகப்பொருள் என்பது உலகியல் வழக்கத்திற்கும் நாடக வழக்கத்திற்கும் பொருந்தி வருமாறு பின்னப்பட்ட வாழ்வியல் களஞ்சியமாகும். அதனைக் களவியல் கற்பியல் எனப் பகுத்தனர். களவு என்பது ஓர் ஆணும் பெண்ணும் நல்லூழின் செயலால் தாமே எதிர்பட்டு, உலகத்தார் அறியாது மறைந்து வாழ்க்கை நடத்துவது என்பதாகும். ஒத்த அன்புடைய ஓர் ஆணும் ஓர் பெண்ணும் பெற்றோர் மற்றும் சுற்றத்தார் அறியாமல், காதலால் உளம் கலந்து பழகும் சிறந்த அன்பே களவு எனப்படுகின்றது. இவர்கள் இருவரும் ஒரே நிலத்தில் வாழக் கூடியவர்களாகவும் இருக்கலாம் அல்லது வேறு வேறு நிலத்து மக்களாகவும் இருக்கலாம். இவர்கள் அடிக்கடி இரவிலும் பகலிலும் குறித்த இடத்திலே சந்திப்பார்கள் (சிதம்பரனார், 2015).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.8.3 கற்பியல்

மனிதனால் மனித சமுதாயத்தின் நலன் கருதி படைத்ததோர் ஒழுக்க முறை வாழ்வே கற்பாகும். கற்பின் வழிநின்று வாழ்வதை எல்லா சமுதாயமும் விரும்பி அதன் படி வாழ்வியலை அமைத்துக் கொள்ள விரும்புவர். இதில் தமிழர்கள் சீரான குடும்ப வாழ்க்கைக்குக் கற்பு நெறி மிக முக்கியம் எனக் கருதினர். அதற்காக ஆன்றோரும் சான்றோரும் சில கட்டுப்பாடுகளையும் வழிமுறைகளையும் அமைத்து கற்பு வாழ்க்கைக்குத் திருமணம் என பெயரிட்டனர். திருமணம் சமுகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண் பெண் உறவு நிலையைக் குறிக்கின்றது. களவு முற்றியப் பின் தலைவனும் தலைவியும் கொடுக்கும் முறைமையையுடைய தலைமகள் பெற்றோர் உடன்பட்டுக் கொடுக்க மணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துதல் கற்பாகும் (ஹப்சி ரோஸ் மேரி, அ. 2017).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.9 முடிவுரை

இவ்வியலில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் களவியல் கற்பியல் வாழ்க்கை எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஆய்வுக்குத் தேவையான ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வினா, ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரங்கள், கலைச்சொல் விளக்கம் ஆகியவைத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi